சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 02.12.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 126/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-3 |
| சாட்சியின் பெயர் | : | விஜயன் |
| தந்தை பெயர் | : | ராஜாமணி |
| கிராமம் | : | பைங்காநாடு |
| தாலுக்கா | : | மன்னார்குடி |
| தொழில் | : | TV சர்விஸ் |
| வயது | : | 43 |

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் TV சர்விஸ் வேலை செய்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவர்

ஆவேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் இந்து கள்ளர் வகுப்பை சேர்ந்தவர் ஆவார். அ.சா-1 கஜேந்திரன் என்பவரை தெரியும். கடந்த 01.06.2025 ஆம் தேதி இரவு 8.00 மணிக்கு பைங்காநாடு கிராமத்தில் பக்கத்தில் உள்ள மது கடையில் நான், அ.சா-2 பாஸ்கர், ராஜிவ் காந்தி ஆகியோர்கள் மது வாங்கி வந்துகொண்டிருந்தோம். அப்போது 8.00 மணி இருக்கும். எதிரி பிரபு (எ) பிரபாகரன் அ.சா-1 கஜேந்திரனை பற தேவடியா மகனே என்று சொல்லி இடுப்பில் அடித்தார். நான் தடுக்க சென்றேன். என்னால் முடியவில்லை. வெளியே சென்று அ.சா-1ன் அண்ணன் மகன் மணிகண்டன் என்பவரிடம் நேரடியாக சென்று எதிரி பிரபாகரன் அ.சா-1 அடிக்கிறார் என்று கூறிவிட்டு நான் சென்றுவிட்டேன். அதன் பின்னர் 04.06.2025 ஆம் தேதி திருமக்கோட்டை காவல் நிலையத்தில் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்கள் விவரம் சொன்னேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

அ.சா-1 கஜேந்திரன் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனக்கு அக்கா மகன் ஆவார். நடந்ததாக சொல்லப்படும் தினத்தன்று நான் மது போதையில் இருந்தேனா என்றால் நான் ஏற்கனவே மது அருந்தி இருந்தேன். அப்போது மேலும் மது வாங்க அங்கு சென்றிருந்தேன். அதே போல் அ.சா-1 கஜேந்திரனும் அன்றைய தினம் மது அருந்திவிட்டு மது வாங்க சென்றாரா என்று எனக்கு தெரியாது. நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தின் போது அங்கு எத்தனை நபர்கள் கூடி இருந்திருப்பார்களா என்றால் ஒரு 20 நபர்கள் இருந்திருப்பார்கள். நான் போலீசார் விசாரணையில் எதிரியுடன் சேர்ந்து மேலும் சில நபர்கள் அ.சா-1 -னை தாக்கியதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பின்னர் மீண்டும் போலீசாரின் மறு விசாரணையின் போது அவ்வாறு எதிரியுடன் சேர்ந்து மேலும் சில நபர்கள் அ.சா-1 யை தாக்கியதாக தவறாக போதையின் காரணமாக கூறிவிட்டேன் என்று சொல்லியிருந்தால் நான் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை. நடந்ததாக சொல்லப்படும் சம்பவ இடத்திலிருந்து

எவ்வளவு தூரம் இருக்கும் என்று சொன்னால் 500 மீட்டருக்குள் இருக்கும். நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் மது கூடத்தின் வாசலில் நடந்தது என்ற விவரத்தினையும், போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை என்றும், அ.சா-1 எனது அக்கா மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.12.02 17:45:32 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.